
இரட்டைவேட்டையர் தோன்றும்
மீண்டும் ஹிட்லர்!
லயன் காமிக்ஸ்
ரூ. 2/-

No 32

## வாசக நண்பர்களே!

என்ன – இந்த இதழில் வழக்கத்துக்கு மாறாக வாசகர் கடிதத்திற்கு முதல் பக்கம் ஒதுக்கப்பட்டிருக்கிறதே என்று யோசிக்கிறீர்களா? விஷயம் வேறு ஒன்றுமில்லை – கடந்த சில மாதங்களாகவே ஒவ்வொரு வாசகரும், விற்பனையாளரும், எங்களைக் கேட்டு வரும் கேள்விகளைத் தான் எதிரே பிரசுரித்துள்ளேன்.

அனைவருக்குமே "ஜூனியர் எப்படி இருக்கும்? எப்பொழுதிலிருந்து வருகிறது?" என்று தெரிந்து கொள்வதில் பயங்கர ஆவல்!

காத்திருந்த அனைவருக்கும் அடுத்த மாதம் விடை கிடைக்கப் போகிறது! ஏனெனில் "ஜூனியர் லயன் காமிக்ஸ்" ஜனவரி 15 முதல் அட்டகாசமாய் காமிக்ஸ் உலகினுள் அடியெடுத்து வைக்கப் போகிறது! அது மட்டுமல்ல.. ஜூனியருடன் கைகோர்த்து ஒரு "மினி லயன்"ம் 'திடும்' பிரவேசம் செய்யக் காத்திருக்கிறது!

மாதா மாதம் 1-ம் தேதியன்று லயன் & திகில் வெளிவருவதைப் போல 15-ம் தேதியன்று ஜூனியர் லயனும், மினி லயனும் வெளிவரும்! ஜூனியர் ரூ. 1-25/- விலையில் - இது வரை எவரும் செய்திராத வகையில் முழுக்க முழுக்க வண்ணத்தில் மலர்கிறது! மினி - ரூ. 1/- விலையில் பாக்கெட் சைஸில் அட்டகாசம் செய்யப் போகிறது!

ஜூனியரிலும், மினியிலும், வழக்கம் போல் ஏகப்பட்ட புதுக் கதாநாயகர்கள் அறிமுகமாவார்கள்! அவர்களுள் சிலரை இந்த இதழின் பின் பகுதியில் அடையாளம் காட்டியிருக்கிறேன்-! இன்னும் பலர் இடநெருக்கடி காரணமாய் ஒதுக்கப் பட்டுள்ளார்கள்!

ஜூனியரும், மினியும் ஜனவரி முதல் உங்களை மெய்மறக்கச் செய்யப் போகின்றன! இன்றே உள்ளூர் விற்பனையாளரிடம் உங்கள் பிரதிக்கு சொல்லி வைத்து விடுங்கள்!

இனி மாதா மாதம், நாம் நான்கு முறை சந்திக்க இருக்கிறோம் என்பதை எண்ணி மிக மிக மகிழ்ச்சியடைகிறேன்! தொடர்ந்து ஆதரவு காட்டி புதிய முயற்சிகளையும் வெற்றியடையச் செய்வீர்களென்ற நம்பிக்கை எனக்கு உண்டு! வணக்கம்,

அன்புள்ள,
S. விஜயன்.
(ஆசிரியர்)


4
மீண்டும் ஹிட்லர்!
இரண்டாம் உலக மகா யுத்தம் முடியவில்லையோ என்னும் படியாக, நாஜிகள் இன்னமும் அச்சுறுத்தும் பயங்கர சக்திவாக நீடிப்பது போல், ஸ்வஸ்திக் கொடிகள் அட்டகாசமாகப் பறந்து கொண்டிருக்க...
Adolf
mit uns



. .லயமாக அடியெடுத்து வைத்து நகர்ந்த, கறுப்பு சீருடையணிந்த அதிரடிப் படையினர்...



கையை உயர்த்தி விறைப்பாக சல்யூட் செய்து...



...தங்களுடைய தலைவருக்கு
இராணுவ முறையில்
மரியாதை செலுத்தினர்!
தேசத் தந்தை வாழ்க! ஹிட்லர் வாழ்க!


குறிப்பிடத்தகுந்த பெரிய மாற்றம் —
போர்க்கருவிகளே...! —16
ஆர்மலைட் ரைபிள்கள்...



...ரேபியர் ஏவுகணைகள்...
-ஏனெனில் இது... 1986 !
தீய சக்திகளின் இந்த சமூக விரோத நடவடிக்கைகளைப் பற்றி ஏதுமறியாது, வேட்டையர்கள் என்னும் டி. வி. தொடரின் கதாநாயகர்களான டிரேக்கும் ஜார்ஜும் டைரக்டரிடம் பாடம் கேட்டுக் கொண்டிருந்தனர்...
இன்னொரு முறை சிந்தித்து விட்டு, தீர்மானமாகச் சொல்லுங்கள்..! மிகவும் ஆபத்தானது -வேண்டாம்... என்று நீங்கள் கருதினால், அந்தக் காட்சியை நீக்கி விடலாம்!
செய்து தான் பார்ப்போமே என்று, எங்கள் ஆசையைத் தூண்டுகிறது, உங்கள் பேச்சு ...ஜேஸன்!
இன்னொரு முறை எங்களை கேட்காதீர்கள்-நாங்கள் மனம் மாறி விடலாம்..!


படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த இடம், பயனற்றுக் கிடந்த இரயில்வே பாதையை ஒட்டியிருந்தது ..
அதோ .. கிளம்பி விட்டார்கள் ! ஆனாலும் இடைவெளி சற்று கூடுதல்தான்! சைட்-கார் இணைக்கப்பட்ட மோட்டார் சைக்கில் இதற்கு முன் யாரும் இப்படியொரு சாகஸம் நிகழ்த்தி நான் பார்த்ததில்லை !
சாதித்துவிட்டார்களேயானால் மிக அற்புதமானதொரு காட்சியாக இது அமைந்துவிடும் ..


தவறினாலோ ?


... நானும்தான் !
அஹ் சாதித்து .. விட்டோம் வண்டி இன்னமும் உருப்படியாகவே இருக்கிறது ... !
ணாங்!



இப்போதெல்லாம் ' வேட்டையர்கள் ' தொடருக்காக நடிப்பதுதான் நம் முழுநேரப்பணியாகி விட்டது — டிபார்ட்மெண்ட்டிலிருந்து அழைப்பு ஏதும் வரக்காணோம் !
நம் சேவை இனியும் தேவையில்லை என்று அவர்கள் தீர்மானித்து விட்டார்களோ?
டி. வி. தொடரில் நடிக்கும் ஸ்டண்ட் நடிகர்களாக மக்களுக்கு அறிமுகமாகியிருந்த அந்த இரு இளைஞர்களும், உண்மையில், பிரிட்டிஷ் உளவுத்துறையின் ஒரு பிரிவான S. /. 6ஐ சேர்ந்த உளவாளிகளாவர்.


அதே வேளையில் அருகாமையில் —
அவர்கள் இங்கே தான் அருகே எங்கோ இருக் கிறார்கள் ... எப்படி யாவது அவர்களிடம் சென்றடைந்து விட வேண்டும்.



டிரேக் ... ஜார்ஜ் - ஹா ஆ ஆ
தீர்ந்தான் - ஒரு வழியாக தொலைத்துக் கட்டியாகி விட்டது !
டுமீல்!
டுமீல்!
வாருங்கள் வந்த சுவடு தெரியாமல் திரும்பிச். சென்றுவிடுவோம்



அது - படபிடிப்புச் சம்பவமல்ல ஜார்ஜ் ! நிஜ கொலையாளிகள் ..
ஓடி வா - அவர்களை மடக்குவோம் !
என்ன ... பேரிரைச்சல் அங்கே ?
மோட்டார் பைக் - ஸைட் காரோடு ! நேராக நம்மைதான் குறி வைத்து வருகிறது ..!


ஐய்ய்ப்...!
அந்த இளைஞன் - நமக்கு ஏற்கனவே அறிமுகமானவன் தான் ! ... டான் லீன் .. 3.1 - 6உளவாளி !
ஆஆ ..வ்
பட்டபிடிப்புக்குழுவினர் அவனை கவனித்துக் கொள்வார்கள். நாம் இந்த அயோக்கியர்களை விரட்டிச் செல்வோம்...
எதுவுமே எனக்கு ஒரு தடையாக இருக்க முடியாது !


இரயில்வே பாதையை ஒட்டி மேலே இருந்த சாலையில்..
அந்த சிறிய வேனில் ஏறிக்கொண்டு விட்டார்கள் — விடாதே துரத்து..!
நம்மை நோக்கி சுடுகிறார்கள்...! திருப்பி சுடு...!


ஐயோ...!
அட்டா... டீஸல் டாங்கை தகர்த்து விட்டேன்- வேன் தீப்பற்றிக் கொண்டு விட்டது !
டுமீல்


ஆ ஆ ஆ ...!


ஹீம் அவசரப்பட்டு விட்டோம்.,! அவர்களிடமிருந்து எதையுமே தெரிந்துகொள்ள முடியாமல் போய்விட்டது
டான் லீனிடமிருந்து விவகாரம் என்ன வென்று விளக்கம் கிடைக்கலாம்



ஆனால் ...
இவனுடைய நிலைமை கவலைக் கிடமானதாக இருக்கிறது .. இதைக் கையில் பற்றிக் கொண்டிருந்தான் !
டிரேக் ... ஜார்ஜ் ...


ஹிட்லர் — இருக்கிறான்!


பின்னர் — மருத்துவ மனையில்—டிரேக்கும், ஜார்ஜும் S. I. 6ன் தலைவர் ஹண்ட்டரோடு இருந்தனர்........
டான் பிழைத்துக் கொண்டு விட்டால் நல்லது. அதி முக்கிய இரகசிய செய்தியொன்று அவனிடம் இருக்கிறது
படு மோசமாக காய மடைந்திருக்கிறன்... பிழைத்து எழுவது சந்தேகம்தான்



பின்னர் —
ஸாரி ... அனைத்து முயற்சிகளும் தோற்றுப் போய் விட்டன.
டான் லீனை இழந்துவிட்டோம்
கிழிந்த இந்த ஸ்வஸ்திக் கொடியை கையில் வைத்துக் கொண்டிருந்தான்.
அவன் கடைசியாக சொன்ன வார்த்தைகள் ''ஹிட்லர்... இருக்கிறான்''


ஹீம்...துடிப்பும் திறமையும் நிறைந்த இளைஞன் ! அவனை தாக்கியவர்களுக்கு கிடைக்க வேண்டிய தண்டனையை நீங்களிருவரும் வழங்கியவரை சரிதான்.
ஆனால் விவகாரம் என்ன என்று விபரம் தெரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டதே...ஸார் ! இரண்டே குறிப்புகள்தான் நம் கைவசம் இருக்கின்றன.



விவகாரத்தை ஆராய்ந்தறிய நீங்கள் துடிப்பது புரிகிறது, ஆனால் எங்கே இருந்து, எப்படி ஆரம்பிப்பீர்கள் உங்கள் புலனாராய்ச்சியை?... ஹிட்லர், பல ஆண்டுகளுக்கு முன் இரண்டாம் உலகப் போரின்போது இறந்துவிட்டான்.......
எனவே, எதை துப்புத் துலக்க டான் முயன்று கொண்டிருந்தானோ, அதை அவன் தவறாக புரிந்து கொண்டிருக்கலாம் !


ஆனால் நீங்கள் துப்புத் துலக்க வேண்டிய வேறொரு விவகாரம் கைவசம் இருக்கிறது.. இங்கிலாந்தின் மத்திய பகுதியிலுள்ள டிச்பீல்டு என்னும் சிறு கிராமத்தில் புதிரான சில ரகசிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக தகவல்...!
அழகான சின்னஞ்சிறு கிராமம்... இத்தனை அமைதியாக தோற்ற மளிக்கும் இந்தக் கிராமத்தில் அசம்பாவிதமாக ஏதும் இரு-க்குமா...?-சந்தேகம்தான் !
ஆனால் நமக்கு வந்த அறிக்கைகள், மர்ம நடவடி க்கைகளை உறுதிப் படுத்து கின்றன..,வித்தியாசமான விபத்துக்களும், விபரீதமான மரணங்களும்தொடர் நிகழ்ச்சியாக நடந்து வருகின்றனவாம் !


அந்தப் பகுதியில், மிகப் பெரிய பண்ணைக்கு சொந்த
க்காரரான பென்ஸன், வாக்கிங் சென்று கொண்டி
ருந்தபோது, திடும் என ஒரு மரம் முறிந்து, அவர் மீது
விழுந்திருக்கிறது...


டிச்பில்டின் மத நிர்வாக கவுன்ஸில் சேர்மன், தன்
வீட்டு கதவை திறந்தபோது வெறிபிடித்த வேட்டை
நாய்கள் சில, குபீரென்று அவர் மீது பாய்ந்துகடித்து
குதறிப் போட்டிருக்கின்றன..



பெரும் செல்வந்தர் ஸர் ஆர்னால்டு, தன் மாளிகையின் சுற்றுச் சுவரருகே இருந்த கிணற்றினுள் ' எப்படியோ ' தவறி விழுந்து செத்துப் போயிருக்கிறார்,
ஊரில் பெரும்புள்ளிகளான இம்மூவரின் மரணத்திற்கும், ஒரேகால கட்டத்தில் தற்செயலாக நிகழ்ந்துவிட்ட தனித்தனி விபத்துதான் காரணம் என்பதுபோல் தோன்றினாலும் ஏதோ பயங்கர இரகசியம் உள்ளடங்கியிருக்குமோ என்றொரு சந்தேகம்...!
உங்கள் சந்தேகம் ஆதாரமற்றதாகவும் இருக்கலாம் !
இந்தப் பயணத்தை, சும்மா பொழுது போக்கிற்காக மேற்கொள்ளப்பட்ட ஓர் உல்லாசப் பயணமாகவே நாங்கள் கருதுகிறோம் !


பின்னர்...
ரவேற்பு பலகையை நட்டு வைத்திருக்கிறார்களே தவிர, நம்மை வரவேற்க இங்கே யாரும் இருப்பதாகவே தெரியவில்லை..!
WELCOME TO DICHFIELD
பொதுவாகவே, கிராமத்து ஜனங்கள் அன்னியர்களின் வரவை அவ்வளவாக விரும்புவதில்லை !


யாரோ நம்மை தொடர்ந்து கண்காணித்து வருவது போல் ஒரு குறுகுறுப்பு-உனக்கில்லையா!


இங்கே அறை ஏதும் காலி யில்லை..,ஸார் ! ம் ம்.. வந்த எல்லா அறைகளையும் கொடுத்தாகிவிட்டது !
THE EAGLE
பொய் சொல்கிறான்,.. விவாதிக்கப் போவதில் நாங்கள் !
வேறு எங்கே இடம் கிடைக்கும் தகவல் தர முடியுமா
ஓ.../அப்படியா நேராக போங்கள் . /ஊர்கோடி வந்துவிடும். /தொடர்ந்து அப்படியே கண்காணமல் போய்விடுங்கள்--அதுதான் உங்களுக்கு நல்லது !
விரட்டுகிறான் நம்மை,../ஏதோ விவகாரம் இருக்கிறது... இப்போதைக்கு சற்று ஒதுங்கியே இருப்பது நல்லது !
THE EAGLE


இங்கே ஊருக்கு வெளியே கூடாரமடித்து தங்குவோம்!
ஒவ்வொருவரின் நட-வடிக்கையும் விநோதமாக இருக்கிறது. ஏனென்று கண்டுபிடிக்க, துடிக்கிறது என் மனம்!
ரவு நெருங்கிய பாது—
அதோ அங்கே தெரிவது துரதிர்ஷ்ட வசமாக உயிர்-நீத்த ஸர் ஆர்ஞ வுடின் மாளிகை! அருகே சென்று ஆராய வேண்டும்!
ஆராய்ச்சியை காலையில் வைத்துக் கொள்வோம்-! பசி ஆளை விழுங்கப் பார்க்கிறது சீக்கிரம் உணவை தயார் செய்!


சாப்பிட்டான பின் படுக்கையை விரித்தார்கள் –
ரொம்பவும் அமைதியான கிராமமாக தோன்றினாலும் தூங்கும்போது இவற்றையும் படுக்கை அடியில் வைத்துக் கொள்வது — நல்லது!
அப்படியொரு பழக்கம் ஏற்கனவே என்னிடம் உண்டு!


அதே சமயம் —
இப்போது இரவு நேர பயிற்சி தொடங்குகிறது! முதலில் -.


26
அந்த ஊடுருவல்காரர்களை தாக்கி அழியுங்கள்...
டிரேக்-அங்கே கவனி,... ! நான் காண்பது கனவல்லவே?


நம்ப முடியாத
காட்சி என்றாலும்-
நிஜம்தான்!
பின் வாங்கி ஓடி
விடுவதுதான் விவேக
மான செயலாக
இருக்கும்-ரேஞ்ச்
ரோவரை நோக்கி
ஓடி வர!


விடாதீர்கள் - அவர்களை
நம் இரகசியங்களை ஓரளவு
பார்த்துவிட்ட அவர்களை
சுட்டுக் கொல்லுங்கள்!


28
ஆனால் நாம் எப்படியேனும் தப்பித்துக் கொள்ள வேண்டியது அவசியமாயிற்றே! திட்டம் 7-ஐ கடைபிடி!
தப்பிச் செல்வது என்பது சாத்தியமேயில்லை!



அதோ - படுகாயமுற்று விட்டார்கள் போலிருக்கிறது! ஸ்மித்-ஜாக்ஸன் வீழ்ந்து கிடக்கும் அவர்களுடைய கதையை முடித்து விட்டு வாருங்கள்.
அந்த பெருமையை எங்களுக்கு அளித்த உங்களுக்கு நன்றி- லெப்டினெண்ட்!
சட்டென்று மின்னல் வேகத்தில் துள்ளியெழுந்தனர் - ஜார்ஜும், டிரேக்கும்.
எங்களை ரொம்பவும்-தான் இளப்பமாக எண்ணிவிட்டீர்கள்-
ஆஆஆ—!
ஊப்ப்-ப்!
அப்படி யொரு தப்பான மதிப்பீடு செய்த மடத்தனத்துக்கு ஏற்ற பரிசதான் இது ..


M-16 ஆர்மலைட்...! வியத்தகு செயல்திறன் கொண்ட ரைபிள்! இந்த பிரிட்டிஷ் நாஜிகள் வசம் பயங்கர ஆயுதங்கள் இருக்-கின்றன என்பதற்கு ஒரு சான்று-இது !
அதைப்பற்றி வியந்து கொண்டிருக்க இது வல்ல நேரம் ! இவர்களுடைய பாக்கெட்டுகளில் கைவெடி குண்டுகள் அகப்படுகின்றனவா என்று பார் !


அந்த டாங்க் நம்மைத் தான் குறி வைத்து வருகிறது !
அவர்கள் மீது ஏற்றி நசுக்கிக் கொல்வோம்!


வாவ்வ்...!
எங்களை நெருங்க உங்களை நாங்கள் அனுமதித்தால்தானே?


வெறி கொள்ளச் செய்து விட்டோம்... அவர்களை!
கிராமத்து ஜனங்களை எழுப்பு..! போன் செய்து, வெளி உதவி கோர வேண்டும்!
ஆனால் ஒவ்வொரு வீட்டின் கதவையும் அவர்கள்பலங்கொண்ட மட்டிலும் தட்டியும் எந்த பதிலும் இல்லை—
அனைவரும் ஒட்டுமொத்த மாக செவிடர்களாகிப் போனார்களா...என்ன?
இதை நாம் முன்பே யூகித்திருக்க வேண்டும் டிரேக்...! கிராமத்து மக்கள் நம்மை எதிரிகளாக கருது கிறார்கள்...நாஜிகளோடு இவர்களுக்கு தொடர்பு இருக்குமோ, என்ற சந்தேகம் எழுகிறது!


அப்படியானால் நாம் சொந்த முயற்சியாக ஏதாவது செய்தால்தானுண்டு! வா... அந்த அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் ஓடிப் போய் விடுவோம்!
இரண்டு குழுக்களாக பிரிந்து, அரை வட்டமாக சுற்றி வளைத்து மடக்குங்கள் அந்தப் போக்கிரிகளை!


அடுத்து—
அதோ...ஓடுகிறார்கள் சுட்டுத்தள்ளி விடலாம்!
இந்தப் பக்கமாக ஓடி வா...ஜார்ஜ்!


அந்தப் பக்கமாக இன்னொரு கூட்டம் வருகிறது...! இடையில் நாம் வகையாக மாட்டிக் கொண்டுவிட்டோம் டிரேக்!
இல்லை-ஒரு தந்திரம் செய்து தப்பித்துக் கொண்டுவிடலாம்!


இருவரும் இப்படி எதிரெதிர் திசையில் சரமாரியாக சுட்டு விட்டு.சட்டென்று பதுங்கி கொள்ள வேண்டும்


அங்கே இருக்கிறார்கள் சுடுங்கள்...!
தந்திரம் பலித்து விட்டது...! இருட்டில் நிலவரம் புரியாமல் இரண்டுகுழுக்களும் ஒன்றையொன்று தாக்கிக் கொண்டிருக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன் படுத்தி நாம் மெள்ள நழுவி விட வேண்டும் !
அங்கேயிருந்து சுடுவது அந்த போக்கிரி நாய்கள்தான்- சுட்டுக் கொல்லுங்கள்
அடர்ந்த புதரின் மறைவில் நின்று சற்று ஓய்வெடுத்துக் கொண்டனர்.
கிழிந்த ஸ்வஸ்திக் கொடியை, டான்லீன் கையில் வைத்துக் கொண்டிருந்தது ஏனென்று, இப்போது விளங்குகிறது... அவன் இந்த நாஜி கும்பலை கண்டு பிடித்திருக்ககூடும்!
ஆனால் இரண்டாவது குறிப்பு- ஹிட்லர் ... இருக்கிறான் என்பது சரியாக இருக்க முடியாதே!
ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்...! டீச் பீல்டில் ஏதோ ஒரு பயங்கர சதி உருவாகிறது. பிரிட்டனின் சுதந்தரத்திற்கே ஆபத்து வரலாம்.... நாம் தான் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்!



F-2


இங்கே இப்படி அதிக நேரத்துக்கு பதுங்கியிருக்க முடியாது! எதிரிகள் எந்த நேரமும் இங்கே வந்து சேரலாம்!
சுற்று வட்டாரத்தில் நமக்கு உதவி கிடைக்கும் இடம் ஏதும் இல்லை.... வாகன வசதியும் இல்லாத நிலையில் எதிரிகளிடமிருந்து எதையாவது பறித்தெடுத்துக் கொள்வது ஒன்று தான் வழி!


வேறொரு தந்திரம் செய்வோம் - இதோ ...
இரண்டு பேர் வருகிறார்கள் ... !


கரக்
அதென்ன சப்தம், ?
காய்ந்த சள்ளியின் மீது
யாரோ நடப்பது போல்...
அந்த ஊடுருவல் பேர் வழி
களாகத் தானிருக்கும்... !





அஹ்...!
ஐயோ...!



சில நிமிடங் களுக்குப்பின்...
இந்த சீருடையில் நம்மை யாரும் கண்டு பிடிக்கவே முடியாது !
இந்தப் பசங்கள்,மயக்கம் தெளிந்து எழுவதற்கு முன் நாம் வெகு தொலைவு சென்று விடுவதோடு. இவர்களுடைய தோழர்களை சமாளிக்க. உதவியை நாடவும் வேண்டும்!
ஆனால்—
அட்டென்ஷன்! தேடும் படலம் இப்போதைக்கு கைவிடப் படுகிறது ! அங்கே கிராமத்தில் தொல்லை முளைத்திருக்கிறது! விரைந்து ஓடி வாருங்கள்!
தொலைந்தது போ...! இப்போது நழுவ முயன்றால் கவனித்து விடுவார்கள் - அவர்களோடு செல்வதை தவிர வேறு வழியில்லை !
39


க்விக்...ஏறுங்கள் வண்டியில்! உள்ளூர்வாசிகள் மடத்தனமாக ஏதோ ஆட்சேபம் தெரிவிக்கிறார்களாம்.. சுலபமாக அடக்கிவிடலாம்!
கிராமவாசிகள் நாஜி கும்பலுக்கு ஒத்துழைப்பு தருவதாக நினைத்தது தவறு... அவர்களுடைய மௌனத்திக்கு காரணம்-பயம்!



அதையடுத்து-
நாஜிகளின் கொடுமை-ஒழிக!
அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்க சம்மதியோம்!
நாஜிகள்... ஒழிக!
இது சுதந்திர நாடு...!
நாஜிகளே— டிச்பீல்டைவிட்டு வெளியேறுங்கள்!



அந்த வீட்டைகுறி வைத்து, தீப்பிளம்பைக் கக்கும் துப்பாக்கியை இயக்கு !
நோ ... நடக்காது -


இது உங்களுக்கு ஒரு பாடம்/ அடுத்த தடவை உங்களில் ஒரு சிலரை உயிரோடு கொளுத்தி விடுவோம் - ஜாக்கிரதை ! வலிமை பெற்று வரும் எங்கள் சக்தியை எதிர்க்க யாராலும் முடியாது.


சண்டாளன்! !இரண்டாம் உலகப் போரின் போது வெறியாட்டம் போட்டது போலவே, இப்போதும் நடந்து கொள்கிருர்கள்!
மாளிகையை நோக்கி நடங்கள்- பெரும்தலைவர் ஏதோ ஒரு முக்கியமான செய்தியை அறிவிக்க விருக்கிருர்!
பார்த்தாயா டிரேக்/ ரேப்பியர் ஏவுகணைகள் கூட இவர்கள் வசம் இருக்கின்றன,
யாருக்கு எதிராக இவற்றை பிரயோகிக்க உத்தேசித்திருக்கிருர்களோ...?



அடுத்து-
அதோ மாளிகையின் பால்கனியில் வந்து நிற்கிறான் தலைவன் சே... கொஞ்சம் கூட நம்பும் படியாக இல்லையே!
பேரரசர் வாழ்க...
பேரரசர் வாழக...
அச்சாக, ஹிட்லர் மாதிரியே இருக்கிறானே?
நாஜி வீரர்களே கவனமாக கேளுங்கள்! என் தந்தையின் போராட்டம் தொடர்கிறது- ஜெர்மனியில் அல்ல... பிரிட்டனில்! அதிகாரத்தை கைப் பற்றும் நம் முயற்சியை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது! உச்ச கட்ட தாக்குதல் இன்று நடைபெற இருக்கிறது... !
'ஹிட்லர் இருக்கிறான்' என்று டான்லீன் சொன்னதன் அர்த்தம் இதுவாகத்தானிருக்கும்...! ஆனால் இது எப்படி சாத்தியம்? ஹிட்லர் இறந்து பல வருடங்களாயிற்றே!



ஒற்றுமை தோற்றத்தில் மட்டும்தான் என்றில்லை- தந்தையைப் போலவே கிறுக்கனா வும், ஆபத்தானவனாகவும் இருக்கிறான் இந்த கராதகன்...!
ரேபியரை ஆயுத்தம் செய்கிறார்கள்... ! விஷயம் என்னவென்று முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும்- வெகு விரைவில்!


டிரேக்கும், ஜார்ஜும் மாளிகையில் நடமாட்டமில்லாத பகுதியை நோக்கி நழுவினர்.....
விஷயத்தை முழுமையாக நமக்குச் சொல்லூரே ஒரு நபரால் தான் முடியும்... அவனை சந்தித்து, விஷயத்தை வரவழைக்க முயற்சிப்போம்... வா !
இதோ- நானும் பின்னாலேயே வருகிறேன் ... டிரேக்!



ஆனால்...
ஹே... அங்கே என்ன செய்தி றீர்கள்... ?
விசாரித்துக் கொண் டிருக்க அவகாசம் இல்லை... !
சுட்டுக் கொல்- அவர்களை!


ஏறத்தாள சாதித்து விட்டோம்- அதோ... அந்த சன்னல் வழியாக உள்ளேகுதித்து விடலாம்...!
ஹே-? தோட்டாக்கள்!


இரண்டு நாஜிகள் நம்மைக் குறி வைத்து சுடுகிறார்கள் !
தொடர்ந்து, மேலே செல் டிரேக்- சரியாக குறி வைக்கத் தெரியவில்லை — அவர்களுக்கு! சமாளித்து தப்பிக்கொண்டு விடலாம் —!



எச்சரிக்கை கொடுத்து நாம் தோட்டாக்களை அவர்களருகே அனுப்பி யும் அலட்சியமாக இரு க்கிறார்களே .. !
இறங்கி வர மறுத் தால் சுட்டுக்கொல் வதை தவிர வேறு வழியில்லை ..



ஊஹூம்... ! பிரயோஜனப் படாது ஜார்ஜ்! தீர்த்துக் கட்டி விடுவார்கள் போலிரு க்கிறது !
அப்படியானால் நாம் செய்யக் கூடியது ஒன்றே ஒன்று தான் !



— கீழே குதிப்பது
இவர்கள் மீது இப்படி குதித்தால் நமக்கு அவ்வளவாக காயம் படாது!
ஐயோ!


இரண்டு பேரும், இப்போதைக்கு எழுந்திருக்கப் போவதில்லை !
வா...ஓடிப் போய்விடலாம்!


நிறையப் பேர் நம்மை விரட்டிக் கொண்டு வருகிறார்கள்,
நாம் தேடிய இரண்டு ஊடுருவல் பேர்வழிகள்- அதோ.../ யூனிபார்ம் என்னை ஏமாற்ற முடியாது...!அவர்களுடைய முகத்தை கவனித்து விட்டேன்/


ஹேய்... ஜாக்கிரதை!


ஹாய்ய்! அதிர்ஷ்டம் நம் பங்கில் இருக்கிறது...! அங்கே ஸ்கார்ப்பியன் டாங்க்குகள் நிற்கின்றன ...பார்!
அருமையான யோசனை ஜார்ஜ்! ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொள்வோம்...!


இதை வைத்துக் கொண்டு, ஒரு பெரிய யுத்தத்தையே நடத்தி விடலாம் ...!


ஆனால்...
நடக்காது – தம்பிகளா...! அசையாதீர்கள்..!
அட... அநியாயமே!


ஹிட்லரின் குமாரனை நேரில் சந்திக்க விரும்பினீர்களல்லவா...? விரைவிலேயே உங்கள் விருப்பம் நிறைவேறிவிடும்..!
சே மடத்தனமாக மாட்டிக்கொண்டு விட்டோம்..!


மாளிகையின் உள்ளே—
கிடைத்தற்கரிய வாய்ப்பு என்று இதை பெருமையோடு சொல்லிக் கொள்ள மாட்டேன் !
மூடு வாயை ! அனுமதி வழங்கினால் தான், பேரரசரின் முன் நீ ஏதேனும் பேசலாம்!


S.I 6 ஐ சேந்தவர்கள் நீங்கள்—இல்லையா..? எங்கள் விஷயத்தில் மூக்கை நுழைத்த உங்கள் சகா ஒருவனை ஏற்கனவே தீர்த்துக் கட்டிவிட்டோம்
ஆனால், டான் லீன் உயிரை விடுமுன் தன் பங்கை சரிவர நிறைவேற்றி விட்டான்../ நாங்கள் இங்கே வந்து சேர காரணம்—அவன் கொடுத்த குறிப்புகள் தான்../
விரைவிலேயே பிரிட்டன் எங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் வருவது உறுதி.. / இன்று மந்திரிகளை சுமந்து கொண்டு, டிச் பீல்டின் நேர் மேலே செல்லவிருக்கும் விமானத்தை, எங்களுடைய ஏவுகணைகள் தாக்கி வீழ்த்தப் போவது ஒரு நல்ல தொடக்கமாக அமையும் /
அந்த அசம்பாவிதம் நிகழ்ந்ததும் நாடெங்கும் பீதியும் குழப்பமும் தலை தூக்கும்... அந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி பார்லிமென்டினுள் நுழைந்து அதிகாரத்தை கைப்பற்றி விடுவோம், நாடு ஜனநாயக தன்மையை இழக்கும், பின்னர் நான் சர்வாதிகாரியாக ஆட்சி புரிவேன்.../
உன் தந்தையின் இலட்சியம் போலவே உன்னுடையதும் கிறுக்குத்தனமாக இருக்கிறது ./ அவரைப் போலவே இறுதியில் நீயும் தோல்வியுறுவது உறுதி !



அர்த்தமற்ற பிதற்றல்கள் போதும் . ! இவர்களை இழுத்துச் செல்லுங்கள் — சிறைகூடத்திறகு! அடுத்து அங்கே இவர்களை எனன செய்யவேண்டும் என்று உங்களுக்கே தெரியும்!
நடங்கடா அற்ப பன்றிகளா!



சிறைக் கூடத்தில்...
பொட்டென்று உயிர்போய் விட்டால் சுவாரஸ்யமிருக் காது...! சித்திரவதைப் பட்டு, துடி துடித்து, மெள்ள சாக வேண்டும் நீங்கள்!
நாஜிகளுக்கு கை வந்த கலையாயிற்றே இது ..


வேடிக்கை, இதோ...
ஆரம்பமாகி விட்டது ..!


இது விளைவிக்கப்போகும் விபரீதம் எப்படிப்பட்டதென்று விரைவிலேயே புரியும்... உங்களுக்கு!
S. I. 6.-ன் புத்திசாலி உளவாளிகளுக்கு ஏற்ற முடிவுதான!


இன்னும் சற்று நேரத்தில் தண்ணீர், அறையின் மேற்கூரைவரை நிரம்பி விடும்...


எத்தனை கத்தினுல் யாரும் இங்கே உதவிக்கு வரப் போவதில்லை...! நீங்கள் மூச்சுத் திணறி செத்துப் போவது உறுதி!


கதவு மூடிக்கொண்டுவிட்டது! அந்தசக்கரத்தை திருகி தண்ணீர் கொட்டுவதை நிறுத்த முயற்சிப்போம்!
கட்டப்படாத கையை, இருவரும் சேர்ந்து பிரயோகித்துப் பார்ப்போம்!
57


ஊஹூம்...! முடியவில்லை!
...எட்டமாட்டே னென்கிறதே!


கதவு மீண்டும் திறந்தது...
ஹஹ்...ஹா..! எங்களுக்குத் தெரியாதா, இப்படியொரு முயற்சியை நீங்கள் மேற்கொள்வீர்களென்று ?...கணக்கிட்டுத் தான் சங்கிலியின் நீளத்தை நிர்ணயித்திருக்கிறோம்...!


வேறு எப்படி முயற்சிக்கலாம்...டிரேக்?
ஒன்றும் புலப்படவில்லை...! மிகமோசமாகத்தான் மாட்டிக் கொண்டிருக்கிறோம்! நீர்மட்டம் வேகமாக உயர்ந்துவருகிறது...!


ஊ ஊ ஊப்ப்... ஊஹூம்...! சங்கிலியை அறுக்கமுயற்சிப்பதால் சக்திதான் விரையமாகும்—பலனிருக்கப்போவதில்லை!
உயிர் பிழைக்க வாய்ப்பேயில்லையோ?



...அந்தசண்டாளர்கள், திட்டமிட்டபடி விமானத்தை சுட்டு வீழ்த்தி மந்திரிகளை கொன்று விடுவார்கள்!
டிச் பீல்டு கிராம மக்கள் எந்த வகையிலாவது நமக்கு உதவினால்தான் உண்டு!



ஆனால் அவர்கள் பயந்து போயிருக்கிறார்கள்! நமக்கேன்வம்பு என்பது போல் வீட்டுக்குள்ளே அடைந்து கிடக்கிறார்கள-அவர்களை சொலலிக் குற்றமில்லை!
வேறு யாருக்கும்-S. I. 6 தலைமையகம் உள்பட— இங்கே நடக்கும் விபரீதங்கள்பற்றி தெரியாது!
நேரடியாக மோதி வீரமரணம் அடையாமல், இப்படி அற்பமான முறையில் உயிர்விட நேரிடும் என்றுநான் கனவு கண்டதுகூட இல்லை... டிரேக்!



இதற்கிடையே, மாளிகையில்,
ரடார்திரையில்ஏதோதெரியத் தொடங்கியிருக்கிறது. அரசே!
எக்ஸலெண்ட்...!


ஆமாம்! நேரப்படி வந்துவிட்டார்கள்...! க்ளாஸ்கோவில் நடைபெறவிருக்கும் ஒரு கருத்தரங்கிற்கு பிரிட்டிஷ் மந்திரிகளை ஏற்றிச் செல்லும் விமானமேதான் அது...


அவர்கள்யாருமே க்ளாஸ்கோ சென்றடையப் போவதில்லை. டிச்பீல்டுக்குநேராக விமானம் வந்ததும், நம் ஏவுகணைகள் கிளம்பிச் சென்று அதை வீழ்த்தும்!
அவர்களுடைய சாவு பிரிட்டனுக்கு விழும் மரண அடியாகும்! குழப்பம் தலைதூக்கும்... அந்த வாய்ப்பை பயனபடுத்தி அதிகாரத்தை பறித்துக்கொண்டுநாட்டின் சர்வாதிகாரியாகிவிடுவேன்!


நவீன யுத்த தளவாடங்கள்
நாஜிகள வசம் இருந்தன...
அவரவர் நிலைக்கு ஓடுங்கள் க்விக்!




ரேப்பியர் ஏவுகணை தயார் நிலையில் இருக்கிறது அரசே!
அதனை இயக்க ஆயுத்தமாகுங்கள் ..!


அதோ நெருங்கி விட்டது விமானம்!


வெற்றி நமதே...!
பேரரசர் வாழ்க. பேரரசர் வாழ்க!
அதேசமயம், அங்கே டிரேக்கும் ஜார்ஜும் மரணத்தின் கோரப் பிடியில் சிக்கித்திணறிக் கொண் டிருந்தார்கள்...
இன்னும் ஓரிருநிமிடங்களில் நாம் முழுவதுமாக மூழ்கிப் போவது நிச்சயம்!
ஐயோ... இப்படியொரு முடிவா... நமக்கு!


தண்ணீர் அறைமுழுவதும்
நிரம்பி விட்டது!


இதற்கிடையே, அங்கே — விமானம் டிச் பீல்டை நெருங்கிக்கொண்டிருந்தது...
விமானத்தின் பாதையை முன்கூட்டியேயூகித்துத்தான் நான டிச பீல்டை தளமாக தேர்ந்தெடுத்தேன்!
இன்னும் சில விநாடிகளில் விமானம் நேர்மேலே வந்து சேர்ந்துவிடும்... அரசே!


இதுவரை நாம் பொறுமையாக காத்திருந்தது வீணபோகவில்லை! என் தந்தையின் நாஜிஸத்திற்கு ஒருமறுமலர்ச்சிஏற்படபபோகிறது. அதிகாரத்தை கைபபற்றி என இஷ்டப்படி ஆட்சி புரிவேன்! பார்லிமெண்ட ஜனநாயகம் என்ற வார்த்தைகளுக்கே இடமிராது... மககள் என ஆணைககு கட்டுப்பட்டு அடங்கி ஒடுங்கி வாழவேணடும்


அங்கே...
டிரேக் என்னிடம் ஏதோ சொல்ல முயற்சிககிருன...
ஜார்ஜ் அநதக கதவு...


இபபோது கதவினமீது நீரின அழுத்தம தீவிரமாக இருககும். இநநிலையில ஓங்கி ஓர் உதை விட்டால கதவு திறநது கொளளலாம'


சுவாசம் தடைடடுவதால, நெஞ்சே வெடித்துவிடும் போல இருககிறது .. பலம் கணிசமாக குறைந்து வருகிறது!
இன்னும் ஒரு தடவைக்கு மேலஉதைகக திராணி யிராது ..!
ஆனல் அநதகடைசி உதை, உரியபலனை கொடுத்து விட்டது!



அப்பாடா...! மரணத்தின் வாசல் வரை சென்று மீண்டு விட்டோம். ஆனால் இந்த சங்கிலியிலிருந்து விடுபட முடியவில்லையே!
யாரோ தடதடவென்று ஓடி வரும் சத்தம் கேட்கிறது காவலாளிகளாக இருக்குமோ?



ஆனால்— வெளியே நடந்து கொண்டிருந்தது, வேறு!
பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு!
டிசபீல்டுக்கு களங்கம் ஏற்படுத்தவந்த நாஜிகளே நாசமாகப் போங்கள்!
இனியும் உங்களுடைய அட்டகாசத்தை சகித்துக் கொள்வதற்கில்லை!


ஓ ..கிராமதது மககள...' உங்களை இங்கேகாண எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது'
பயநதுபோய் பதுங்கிக கிடககிறீர்கள் எனறல லவா எணணினேம!
...அது உண்மைதான்... ஆனல் எதற்கும் ஓர் எல்லை உணடலலவா?


ஏவுகணைகளை அனுப்ப ஆயத்தம் செய்து கொணடிருக்கிருர்கள். ஓடிவாருங்கள்...!
அவர்களுடைய சதித்திட் டததை எப்படி முறியடிக்க வேண்டும் என்று உங்களுக்குத் தான் தெரியும்!


அங்கே—
விமானம நெருங்கிவிட்டது—
சுட்டுத் தளளுங்கள்


திடீரென—
ரேப்பியர் ஏவுகணையின் போக்கு
வயர் மூலமாக கட்டுப்படுததக்
கூடியது! எனவே வயரை இப்படி
நான துண்டித்து விட்டால ஏவு
கணையை இஷ்டப்படி கட்டுப்
படுத்தி இலக்கை சரியாக
குறிவைக்க முடியாது!
ஏய... முட்டாள்.


வான்வெளியிலோ —
என்ன ஏவுகணையா? நிஜம்தானா?
வேகத்தை உச்சப்படுத்தி, முதலில் இந்தஇடத்தைவிட்டு விரைந்து விலகிச் சென்று விடலாம...



நல்லவேளை சற்றேவிலகிச் சென்று விட்டது.நாம் உயிர் பிழைததே பெரிய ஆச்சரியம்தான்.


டிரேக், ஹிட்லரின் மகனை
இறுகப்பற்றினான...
ஆயுதங்களை எறிந்து விட்டுமாளிகை யினுள் செல்லும்படி உன் ஆட்களுக்கு உத்தரவிடு. இல்லையேல், மென்னியை முறித்து விடுவேன்!
இவன் சொல்கிறபடி செய்யுங்கள்... எல்லோரும்!


உதவிக்கு கிராம மக்களும் வந்து சேர்ந்தனர்...
இவர்களை உள்ளே வைத்து பூட்டிவிடலாம்— பிறகு போலீஸாருக்கு தகவல் கொடுப்போம்!
அந்த இரு இளைஞர்களின் ஒத்துழைப்பும் இருந்ததால் தான் இந்தபோக்கிரிகளின் அட்டகாசத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க முடிந்தது.!


அடால்ப் ஹிட்லரின் மகனையும், அவரது
படையையும் வெற்றி கொள்வது என்பது
சாதாரண விஷயமல்ல... இளைஞர்களே
அந்தச் சாதனையை நிகழ்த்திய உங்களை
நான் பாராட்டத்தான் வேண்டும்
போதும், சவடால் பேச்சு
கோட்டில் என்ன விஷமம்
செய்து கொண்டிருக்
கிறாய்?


என் யூனிபார்மில், ஒரு பட்டன்
அறுந்து கொண்டு விட்டது!
இதோ... எரிந்துவிட்டேன்!


மறுகணம் -
ஹே...என்ன இது —
மயக்கவாயு..!


அதுபட்டன் அல்ல.. அம்மாதிரி வடிவமைக்கப்பட்ட மயக்கவாயுவை உமிழும் காப்ஸ்யூல்! இம் மாதிரி நெருக்கடியான சந்தர்ப்பத்தில் பயன் படுமென்று நான் செய்து கொண்ட முன்னேற்பாடு இது! உங்களை பின்னர் சந்திக்கிறேன்... முட்டாள்களா!



பின்னர் S. I. 6ன் தலைவர் கர்னல் ஹண்ட்டர் போலீஸாரோடு அங்கே வந்து சேர்ந்தார்...
நம்ப முடியாத அளவுக்கு படுபயங்கரமான விவகாரமாகவல்லவா இருக்கிறது! அடால்ப் ஹிட்லருக்கு இப்படி ஒரு மகன் இருக்கிற விஷயமே, யாருக்கும் தெரியாது!
துரதிர்ஷ்டமாக... அது தான் உண்மை, ஸார்!
POLICE
இதுவே அவனது முதலும், கடைசியுமான சதிச் செயல் என்று நம்புவோமாக!
ஆனால், பிறிதோரிடத்தில்...
இத்தோடு ஓய்ந்துவிடுவேன் என்று கனவு காணாதீர்கள்.. மீண்டும், தக்கதருணத்தில், உரியஇடத்தில் வெளிபட்டு என் வல்லமையை இவ்வுலகத்தாருக்குபுரியவைப்பேன்... இது உறுதி! ஹிட்லர் வம்சம் இன்னும் அழியவில்லை!
முற்றும்.

# பயங்கரக் கொள்ளையன்!





சல்லடை கண்களாகத் துளைக்கப்பட்டிருக் கிறது...
அத்தனை தோட் டாக்கள் பாய்ந்த அடையாளங்கள்!
டமால்
போலீஸ் அதிகாரிகள் இருவரும் சுடப்பட்டிருக் கிறார்கள் - பாறையில் மோதிய அதிர்ச்சியில் உயிர் பிரிந்திருக்க வேண்டும்... பின் ஸீட்டிலிருக்கும் நபர் கஞ்சா கடத்தும் கூட்டத் தைச் சேர்ந்த ரிக்கோ அல்லவா?



...அவன் தொழிலைவிட்டு விட்டதாக கேள்விப் பட்டேனே!
அவன் அரசு சாட்சியாக மாறி தன் கூட்டத் தினருக்கு எதிராக வாக்குமூலம் கொடுக் கப் போவதாக ரேடியோவில் கேட்டேன்!
அதோ...அங்கே வருகிற காரைக் கவனி- அது வரும் விதமே சரியாகத் தோன்றவில்லையே!
இங்கே எங்கோ அருகில் மறைந்திருந்து இப்போது வெளிப்பட்டிருக்க வேண்டும்!




வெடிகுண்டை வீசுகிறான்-படுத்துக் கொண்டு விடு!
இதென்ன... புதுத் தொல்லை!

என்னுடைய குறி மட்டும் சரியாக வாய்க்குமேயானால்...
வேண்டாம் டிரேக்... தோட்டாவை வீணடிக்காதே!



திரி தீருமுன், அவர்கள் அனுப்பி வைத்த பரிசுப் பொருளை திரும்ப அவர்களுக்கே அனுப்பி விடலாம்!
யியீஈ யா... ஹா ஆஆ!



ஒருவன் மட்டுமே பாக்கி...
ஆ...வ்!


நவீன இயந்திர துப்பாக்கி-ஹே.. பசங்கள்-சரியான ரௌடிக் கும்பல்தான்!
உஷ்...ஷ்ஷ்-என் தலை!
ரிக்கோவுக்கு சுயவுணர்வு திரும்புகிறது!


ரிக்கோ...பயப்படத் தேவையில்லை-எழுந்து நிற்க முயற்சி செய்!
நா நா...ன் எங்கேயிருக்கிறேன்? இங்கே என்ன நடந்தது!


இது கனடாவின் மலைப் பிரதேசம்! இரண்டு காவல்துறை அதிகாரிகள் நான்கு ரௌடிகள் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் அவர்கள் எல்லோருமே காலி!
ஞாபகம் வருகிறது...வாக்குமூலம் கொடுக்க என்னை நியூயார்க்குக்கு விமானத்தில் அனுப்பி வைக்க போலிஸார் விமான தளத்துக்கு காரை ஓட்டிச் சென்று கொண்டிருந்தார்கள்-வழியில் விஷமிகளால் தாக்கப்பட்டிருக்கிறோம்!
கடத்தல் கும்பல் என்னை குறிவைத்து அலைகிறது! என்னை தீர்த்துக்கட்டாமல் ஓயவே மாட்டார்கள்.
எங்களோடு இருக்கும்வரை நீ எந்தப் பயமும் கொள்ளத் தேவையில்லை...உன்னை பத்திரமாக நியூயார்க் கொண்டு போய்ச் சேர்க்கும் பொறுப்பு இனி எங்களுடையது!


அரசு தரப்பில் சாட்சியாகி நீ உன் பழைய கூட்டாளி களுக்கு எதிராக வாக்கு மூலம் கொடுத்தால் உனக்கு மன்னிப்பு கிடைக்கும் - அப்படித் தானே... ரிக்கோ!
ஆமாம்... குற்ற வாழ்க்கை அலுத்துவிட்டது!
FORD


நடந்ததை மறந்து புது வாழ்க்கைத் தொடங்கத் துடிக்கிறேன்!
OSSO
HOTEL
BANNING
தோழர்களானாலும் சமூக விரோதிகள் என்பதால் அவர்களுக்கு எதிராக நீ வாக்குமூலம் கொடுப்பது துரோகச் செயலாகாது தான்!





பின்னர்...
உள்ளூர் காவல் நிலையத்தில் நமக்கு ஏதாவது உதவி கிட்டுமா என்று முயன்று பார்ப்போம்.
கூடுதல் பலம்-கிடைத்தவரை ஆதாயம்தான்!
யார்... ரிக்கோவா?
ஆமாம்...இன்ஸ்பெக்டர்! உடனடியாக இவனை விமான நிலையத்துக்கு கொண்டுபோய் விமானத்தில் ஏற்றி அனுப்பி வைக்காவிடில் எந்தக் கணமும் தோட்டா இவனை துளைத்து விடும் அபாயம் இருக்கிறது!



உங்கள் உதவியை நாடி வந்திருக்கிறோம்!
உதவிதானே...ம்... செய்கிறேனே!
ஆனால்— உங்களுக்கல்ல!



அந்த திடீர் திருப்பம் அதிர்ச்சி அளிக்கக்கூடியதாக இருந்த போதிலும் சுலபமாக புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது...
அநீதிக்கு துணை போகும் அயோக்கியன் ஹூம்... அவ்வளவுதான் நம் அதிர்ஷ்டம்!
சாண்டினி- கடத்தல் கும்பலின் தலைவன்!
ரிக்கோ...இரண்டு துணைவர்களோடு இங்குதானிருக்கிறான்-ஆல்ரைட் சாண்டினி- உன் ஆட்கள் இங்கே வரும் வரை இவர்களை இங்கே தேக்கி நிறுத்தி வைக்கிறேன்—சரிதானே!


உங்கள் வசமுள்ள அனைத்து ஆயுதங்களையும் வெளியே எடுத்து வையுங்கள்...விஷமத் தனமாக ஏதாவது செய்ய முயன்றால்—விளைவு விபரீதமாக இருக்கும்...ஜாக்கிரதை!
தன் கையிலிருந்த கோலா பாட்டிலை சட்டென்று சாய்த்தான் ஜார்ஜ் ...
அ...ஹ்!
டிரேக்...மிச்சத்தை நீ கவனித்துக் கொள்!


சமூக விரோதிகளின் கைக் கூலிகள் காவல்துறை யினுள் ஊடுருவி இருக்கும் அசம்பாவிதத்தை என்னால் சகித்துக் கொள்ளவே முடியாது...எனவே—
வா...ரிக்கோ—ஓடிப் போய்விடலாம்! போக்கிரிகள் எந்த நிமிட மும் இங்கே வந்து சேரக் கூடும்!
சத்!
ஙங்...க்!



அப்படி சுலபமாக தப்பியோடிவிட அனுமதியேன்.
நம்மைக் கொன்று விடுவான்... கிராதகன்!
நீ கொடுத்த அடி போதாது டிரேக்!


அவனு...நாமா என்ற நெருக்கடியில் வேறு வழி புலப்படவில்லே!
அஹ்-ஆஆ!
அவன் நம் காரின் டயரை சுட்டுத் தொலேத்து விட்டான்-காற்று இறங்கி விட்டது!
டும்!


ரிக்கோவை விமான நிலேயத்துக்கு கொண்டு சேர்க்க முடியாது போலிருக்கிறதே!
சாண்டினியின் ஆட்களிடம் அகப்பட்டோமோ மறு நிமிடமே நான் பிணமாகிப் போவது உறுதி!
AIRPORT
இதோ் வருகிறது... நமக்கு உடனடியாக தேவைப்படும் வாகன வசதி! ஸ்டாப்!



முதியோர் உல்லாச பயண தனியார் பேருந்து இது...
பரவாயில்லே தாத்தா... உங்களுக்கு ஏன் சிரமம்— விடுங்கள் நான் ஓட்டி வருகிறேன்—நாங்களும் விமான நிலையம்தான் செல்ல வேண்டும்!



ரிக்கோ... உட்கார்ந்து தலையை குனிந்துகொண்டு வா!
வேட்டையர்கள்டி.வி. நிகழ்ச்சியில் வரும் கதாநாயகர்களல்லவா?
இவர்களிடம் ஆட்டோகிராப் வாங்கிக் கொள்வோம்... எட்விஞ!


ஆட்டோகிராப்தானே... இதோ போட்டுத் தருகி றேன்! என் பெயர்-ஜார்ஜ்! அவன் டிரேக்!
வெட்டிப் பேச்சுக்கு இதுவல்ல நேரம் ஜார்ஜ்-நம்மை ஒரு கார் பின் தொடர்ந்து வருகிறது!



சாண்டினியின் ஆட்களாகத் தானிருக்கும்!
வேகத்தை உச்சப்படுத்து டிரேக்!
AIRPORT 10


என்ன இதெல்லாம்?
பயப்படாதே எட்வினா... டி.வி. நிகழ்ச்சி படப் பிடிப்புக்கான 'ஒத்திகை' இது என்று நினைக் கிறேன்...



நம்மை அவர்கள் முந்திக் கொள்ள இடம் தராதே!
எதிரே சாலை அகல மாக இருக்கிறது- தவிர்க்க முடியாது!
AIRPORT




ஒரே ஒரு வழி இருக்கிறது! எல்லோரும் இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்—சடன் பிரேக் போடப் போகிறேன்!




ஹே...வேனை சட்டென்று நிறுத்தித் தொலைத்து விட்டார்கள். கவனம்!
அவர்கள்...ஒன்று விசையோடு நம் வேனோடு மோத வேண்டும்... அல்லது—



ஆ-வ்-ஐ...யோ!
கிரீச்!
மோதலை தவிர்க்க காரை சட்டென்று பக்கவாட்டில் திருப்பி இப்படி பறகக வேண்டும்-பள்ளத்தை நோக்கி!


காட்டுத்தனமாக வண்டியோட்டும் உன் விளையாட்டு புத்திக்கு இப்படி ஒரு பலன் இருக்குமா என்ன?
வேடிக்கைப் பேச்சு போதும் ஜார்ஜ்... இன்னேரம் கடததல் கும்பலைச் சேர்ந்த ஆசாமிகள் விமான நிலையத்தில் பரவலாக நின்று நம் வரவை எதிர்நோக்கி காத்திருக்கக் கூடும்—அதற்கும் ஒரு உபாயமிருக்கிறது!


விமான நிலையத்தில் —
எங்களோடு வாருங்கள்... உங்கள் பெட்டிகளை நாங்கள் எடுத்து வருகிறோம்!
தங்கமான பிள்ளைகள்!
அடேயப்பா... என்ன சுறுசுறுப்பு!



அடுத்து...
நுழைவாசலில் நிற்பவர்களை கவனி! அவர்களே தான்!
வேகமாக நடங்கள் ஆண்ட்டி...விமானத்தை கோட்டை விட்டுவிடப் போகிறோம்!
NEW YORK FLIGH
GATE 4


பார்த்து—
பார்த்து!
மன்னித்துக் கொள்... தம்பி!
ஆவ்.. என் முட்டி போச்சு!


பின்னர்—
ரிக்கோ...இனி நீ உன் வேஷத்தைக் கலைத்து விடலாம்! அந்த சோதா பசங்களை நன்றாகவே ஏமாற்றி விட்டோம்! இனி நம் பயணம் தடைப்படாது!
உங்கள் இருவருக்கும் என் நன்றி!



தங்களுடைய உடையையும் தொப்பியையும் இரவல் கொடுத்த அந்த இரண்டு மூதாட்டிகளுக்குத் தான் நீ முக்கியமாக நன்றி சொல்ல வேண்டும்!
ஹே...ரிக்கோ- சிரித்து சிரித்து என் வயிறு புண்ணாகிப் போவதற்குள் இந்த வேஷத்தை கலைத்து விடு...ப்ளீஸ்!
முற்றும்.


மாபெரும் தொடர் சைக்கிள் போட்டி அடுத்த சனிக்கிழமை
இந்தப் போட்டியில் ஐயா பங்கேற்கப் போகிறார்...!
அதனாலென்ன? தோட்டத்தில் கொஞ்சம் பயிற்சி செய்து கொண்டால் போயிற்று!
ஆனால் நீ சைக்கிளைத் தொட்டே பல யுகங்களாயிற்றே கிச்சு!
சக்கரங்கள் தரையில் படாதவாறு இப்படி சைக்கிளைக் கட்டித் தொங்க விட்டுவிட்டால்—
விச்சு & கிச்சு
இருந்த இடத்திலிருந்தே எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பயிற்சி செய்யலாம்!


ஆனால்—
சடக்.
டமார்!
விஷ்ஷ்!...
என்ன கலாட்டா நட - மேஜிஸ்டிரேடிடம்!
ஹ! ஹ-ஹ! மேஜிஸ்டிரேட்டிற்கு என்னை நன்ருகத் தெரியும்! நான் குடியிருக்கும் வீட்டின் மாடியில் தான் அவர் இருக்கிருர்! ஆகையால் சுலபமாய் என்னை விடுவித்து விடுவார்!


கவனக் குறைவாய் சைக்கிள் ஓட்டியதற்கு 10 பவுண்ட் அபராதம்! திரும்பவும் இதே போல் நடந்ததானால் தண்டனை கடுமையாக இருக்கும்!
COURT
இனி என்ன செய்யப் போகிறாய் கிச்சு?
வீட்டுக்குள்ளேயே பயிற்சி செய்தால் போயிற்று!
இப்படி கூரையோடு சேர்ந்து சைக்கிளைக் கட்டிவிட்டு மணிக் கணக்காக சவாரி செய்யலாம்! கயிறு அறுந்து விட்டால் கூட, மெத்தை என்னைத் தாங்கிக் கொள்ளும்!
ஆனால்—
தொடர்ந்து-
கவனக் குறைவாய் சைக்கிளை ஓட்டியதற்கும் வீட்டுக்காரர்களுக்குத் தொல்லை கொடுத்ததற்குமாய் சேர்த்து 50 பவுண்ட் அபராதம்!
ஹ்ம்ம்ம்-சைக்கிள் போட்டியும் போச்சு! சைக்கிளும் போச்சு!


இராணுவ பயிற்சியின் ஒரு அம்சமாக கள ஒத்திகை நடந்து கொண்டிருந்தது ...
ஓடிவாருங்கள் இந்த காட்டுப் பகுதியை வசப் படுத்திக் கொள்வோம்!
ஏவுகணை கடத்தல்!


டுமீல்! டுமீல்! —நீங்கள் எல் லோரும்காலி!
ஐயோ எதிர்படை யினர் நம்மை வீழ் த்தி விட்டார்கள்!


அட.. டி.வி. 'வேட்டையர்கள்' நிகழ் ச்சியின் கதாநாயகர்கள் டிரேக்கும் ஜார்ஜூம் அல்லவா நீங்கள்...
நிஜமாகவே மிரண்டு போய் விட்டோம்— அத்தனை தத்ருபமாக அசத்தி விட்டீர்கள்!
பாராட்டுக்கு நன்றி!



அடுத்த நிகழ்ச்சிக்கான சூழலை வடிவமைக்க இங் கே சுற்றிக் கொண்டிருக் கிறோம்.
ஆட்டோகிராப் ... ப்ளீஸ் !
டிரேக் ஜார்ஜ் — இங்கே வாருங்கள்!
இவர் மேஜர் கார்டியூ! கள பயிற்சி பொறுப் பதிகாரிகளில் ஒருவர்! நம் டி வி. நிகழ்ச்சி சம்பந்தமாக ஒரு நல்ல ஆலோசனை தெரிவி த்திருக்கிறார்.
உங்களை சந்திக்க வாய்ப்புகிடைத்த து என்பாக்கியம்!
தேசத் துரோக செயல் களில் ஈடுபடும் நபர் — இவருடைய நடவடிக் கைகளை கண்காணிக்க வேண்டும்என்றுஹண் டர் சொல்லியிருக்கிறார்



போய் டீ குடித்து விட்டு வாருங்கள் — ஏவுகணையை நான் காத்து நிற்கிறேன்.
விவகாரம் ஆரம்பமாகிவிட்டது ஜார்ஜ்!



எங்கே போகிறீர்கள் — நில்லுங்கள், கார்டியூ!
என்ன இது ..? ஓடி வாருங்கள்... என்னைத்தாக்குகிறார்கள்!


இராணுவ அதி
காரி மீது கை
வைக்க உங்க
ளுக்கு என்ன
தைரியம்?
பிரபல டி.வி. நடிகர்
களேயானாலும்
விஷமம் செய்பவர்
களை சும்மா விடு
வதற்கில்லை!
ஜார்ஜ், இவர்
களை நீ சமாளி—
நான் கார்டியூ
வைக் கவனிக்
கிறேன்.
ஊப்.. ப்
சரி
ணங் ..
107



எனக்கும் சண்டை
போடும் யுக்திகளில்
பயிற்சி உண்டு
தம்பிகளா!
ஆவ் . வ்!



ஆனால் .. விரைந்து
கொண்டிருந்த ஏவுக
ணை பொறியினுள்—
நீங்கள் இரகசிய உளவாளிகள்
என்று புரிந்து கொண்டேன் ...
உயிரோடு உன்னை விட்டு
வைத்தால் ஆபத்தாகி விடும்!
ஆ ஆ !


அந்த எவுகணை பொறியை விரட்டிப் பிடித்து விடும் இந்த சீப்டென் டாங்க் எறி. முழு வேகத்தில் செலுத்து, ஜார்ஜ்! கார்டியூ, ஆபத்தான பேர்வழி!
தான் நம்ப மாட்டேன்!



நான் கூடத்தான்! துரோகிகளை அறவே பிடிக்காது எனக்கு!
ஏவுகணை பொறி நின்று விட்டது. கார்டியூ சரணடைய தீர்மானித்திருக்கலாம்!


...நம்மை நோக்கி ஒருஏவுகணை பாய்ந்து வருகிறது பார்!


டாங்க்கை விட்டு சட்டென்று வெளியே குதித்து விட்டதால் பிழைத்தோம் கவனியுங்கள்.. ஒரு ஹெலிகாப்டர் ஏவுகணை பொறியை தூக்கிச் செல்ல வருகிறது!



இலக்கை நோக்கி ஏவுகணையை செலுத்துவது எனக்கு கை வந்த கலை!
இராணுவ களபயிற்சியின் போது நடக்கும் சாதாரண நிகழ்ச்சி போல திட்டமிட்டிருக்கிறான், கார்டியூ வேற்று நாட்டின் கைக்கூலி என்பது உறுதியாகி விட்டது. டிரேக் ஏதாவது செய்து முறியடித்தால் தான் உண்டு!
ஓ வெறும்சிராய்ப்போடு தப்பி விட்டாயா? இதோ .. இம்முறை தவறு நேரிடாது!
சுடாதே—பொறு! தோட்டாவை நீ வீணடிக்கத் தேவையில்லை நானே கீழே குதித்து உயிரைப் போக்கி கொள்ள தீர்மானித்து விட்டேன். இதோ—


கீழே அடர்த்தி
யாக உள்ள அந்
த மரங்கள் என்
னைத் தாங்கிக்
கொள்ளும்!


எ . எஎ . ன்ன
விபரீதம் இது ?
ஆ ஆ !
WE-5




லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன், முகவரி: லயன் காமிக்ஸ், த. பெ. 55, சிவகாசி-626123. போன்: 21159. வெளியீடு எண் : 32. அச்சிட்டோர் : முத்து பைன்ஆர்ட் பப்ளிகேஷன்ஸ், சிவகாசி-626123.


பிப்ரவரி
வெளியீடு!
லயன்
காமிக்ஸ்
ரூ. 2/-
புரட்சித் தலைவன்
ஆர்ச்சி!
116


ஆர்ச்சிக்கோர் ஆர்ச்சி!
ரூ. 2-50
விரைவில் வருகிறது!
லயன் காமிக்ஸ்


டெக்ஸ் வில்லர் தோன்றும்
பழி வாங்கும் பாவை
லயன் காமிக்ஸ்
ரூ. 2/-
அடுத்த வெளியீடு!
V117

# தீபாவளி மலர்! வாசகர் கடிதம்!

- எஸ். ராஜகோபால, அறந்தாங்கி.

தீபாவளி மலர் கண்டேன். அழகான வழ-வழப்பான அட்டை. ஆறு சித்திரக் கதைகளும் சூப்பர். கண்களுக்கு அழகான படங்கள். லயன் காமிக்ஸ் வாசகர்களுக்கு ஒரு நண்பன் தான்.

- ஸ்பைடர் வாசகர் மன்றம், இறச்சகுளம்.

உடல் மண்ணுக்கு! உயிர் லயனுக்கு!!
தித்திக்கும் தீபாவளி மலரில் ஸ்பைடர் தவளை எதிரியையும் எறும்பு பட்டாளத்தையும் வென்ற விதம் அருமையிலும் அருமை தமிழ்நாட்டிலேயே இப்படிப்பட்ட சூப்பர் கதைகளை வெளியிடுவது நமது லயன் காமிக்ஸ்தான்.

வாழ்க ஸ்பைடர்! வளர்க அவர் புகழ்!
தித்திக்கும் தீபாவளி மலரை படித்தேன்,
ஸ்பைடர் சாகஸம் கண்டு மலைத்தேன்.
ஆறு கதைகளை சுவைத்தேன்! லயன்
காமிக்ஸை பத்திரப்படுத்தினேன்.
வாழ்க லயன்! வளர்க லயன் புகழ்!

- N. அபுபக்கர், கரம்பக்குடி.

தீபாவளி விருந்து வைத்த லயன் காமிக்-ஸிக்கு நன்றி! தீபாவளி மலர் என்னை அசர வைத்து விட்டது. லயன் இன்னும் வளர என் வாழ்த்துக்கள்!

- E. ரமேஷ், திருச்சி-1.

எனது அருமையான சிங்கமே! தீபாவளி மலர் அருமை. அதிலே எனக்கு ஸ்பைடரின் தவளை எதிரியும் இரட்டை வேட்டையரின் திடீர் துரோகியும் மிகவும் பிடித்தது.

- S. செந்தில்வேல், A.ராஜா ஜெம்சா பொள்ளாச்சி.

தீபாவளிக்கு எங்கள் வீட்டில் செய்த இனிப்பு கூட இப்படி சுவைக்கவில்லை. ஆனால் தீபாவளி மலரோ தேனினும் இனித்தது. வாழ்க லயன் காமிக்ஸ்!

- S. ரவிச்சந்திரன், அருப்புக்கோட்டை.

தீபாவளி மலர் சூப்பர், லட்டு போன்ற ஆறு டக்கர் கதைகளும் அறு சுவை உணவு உண்டது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. இது போன்றே கதைகளை வெளியிடுங்கள்.

- K. K. ஐயப்பன் பூ மார்க்கெட் கோவை-1.

தித்திக்கும் தீபாவளி இதழ் படித்தேன். இரட்டை வேட்டையர் பரவாயில்லை. மாடஸ்டி பிளைஸி சூப்பர்ப். ஸ்பைடர் கதை மிகவும் அருமை. லாரன்ஸ் டேவிட் சாகஸம் டாப். அற்புதம் நிகழ்த்தி விட்டது ஆர்ச்சி மொத்தத்தில் தீபாவளி இதழ் மிகவும் அருமை.

- K சுந்தராஜ், காங்கேயம்.

காலங்களில் வசந்தம்
மாதங்களில் மார்கழி
காமிக்ஸில் லயன் காமிக்ஸ்,



எடுத்த எடுப்பிலேயே
ஸ்பெஷலாய் மலர்கிறது -
ஜூனியர் லயன் காமிக்ஸ்
JUNIOR
முதல் வெளியீடு - சூப்பர் சர்க்கஸ்!
ரூ. 2/-
ஜனவரி 15 முதல் மாதம் ஒருமுறை...


வருகிறார்கள்!
ஜூனியர்
அலிபாபா & சிந்துபாத்
ஆசிரியர்: விஜயன்.
ரூ. 1.25
ஜூனியர்
ரூ. 1-25
அரைக் கால் டிரவுஸர் அலிபாபாவும்
சிறுவன் சிந்துபாதும் செய்யும்
அட்டகாசங்கள்!



சுஸ்கி & விஸ்கி
லக்கி லூக்
டிம்பி & ஜெர்ரி
ஜனவரியில் வருகிறார்கள்...!


மினி
லயன்
மிகக் குறைந்த விலையில் அட்டகாசமான சித்திரக்கதைகள்
முதல் வெளியீடு!
துப்பாக்கி முனையில்!
ரூ. 1/-


வருகிறார்!
சூப்பர் பைலட்
டைகர்
மினி லயன்
ரூ. 1/-


மினி லயனில்
வருகிறார் -
மறையும் மாயாவி
ஜாக்!
மினி
லயன்


வருகிறார்கள்!



# ரூ. 101/- பரிசு!

# "திருட்டுச் சிரிப்பு"

போட்டியில் பங்கேற்ற வாசகர்கள் அனைவருக்கும் எமது நன்றி! பரிசு பெறும் ஜோக்குகள் கீழே உள்ளன.



**திருடனின் மகன்:-** என்னப்பா இது! நம்ம வீட்டுக்கு வரும் போது கூடவா இப்படி ஜன்னல் வழியா ஏறிக் குதிச்சு உள்ளே வரனும்?

**திருடன்:-** உம்-நான் என்ன செய்வேன்! இரவில் எங்கும் இப்படி போயே பழகிப் போச்சு!

இதற்கான பரிசு ரூ. 51/- பெறும்.



**வாசகர்:-** திரு. சின்னஞ்சிறு கோபு,
முடிகண்டநல்லூர் - (P. O.)
செம்பனார்கோவில் வழி,
மயிலாடுதுறை - (RMS)

இரண்டாவது ஜோக்கிற்கான பரிசு.

**பையன்:-** என்ன, இப்படி ஜெயிலுக்கு வந்து உட்கார்ந்து கொண்டால், என்-ஹோம்-ஒர்க்கையெல்லாம் யார் செய்வார்கள் என்ற நினைப்பாம்?

இதற்கான பரிசு ரூ. 51/-ஐ பெறுகிறா

**வாசகர்:-** திரு. M. சுயம்புலிங்கம்,
106 K/35/B. மில்லர்புரம்.
சின்னமணி நகர்,
தூத்துக்குடி-8.



புத்தாண்டில் உங்களுக்குக் காத்திருக்கும் "திகில்" விருந்து! ....
ஜனவரி 1987 முதல் உங்கள் அபிமான "திகில்" காமிக்ஸ் ...
புதிய கதைகளுடன்
சிறிய சைஸில் ...
குறைந்த விலையில் ...
அரைடஜன் சூப்பர் ஹீரோக்களை அறிமுகப்படுத்தப் போகிறது ...!
அடுத்த இதழ் முதல் "திகில்" காமிக்ஸின் விலை ரூ.2/- ...
அது மட்டுமல்ல ...
கூடிய சீக்கிரத்தில் உங்கள் அபிமான "திகில்" ...
மாதம் இருமுறை வெளிவர-யிருக்கிறது...
ஜனவரி இதழில் இன்னும் விபரங்கள்...

விரைவில்...!


சூப்பர் ஸ்டார்
ரோஜர் மூர் தோன்றும்
விரட்டி வரும் மரணம்!
கஞ்சா கடத்தல் கும்பல்
தினச் சுடர்
ரூ. 2/-


பயங்கரவாதிகள் & CO
திகில்!
ரூ.2/-

வருகிறது...!







பழிவாங்கும் புயல் ஜான் ரேம்போ தோன்று
மரண விளையாட்டு!
திகில்!
அடுத்த வெளியீ
ரூ.2/-


இரட்டைவேட்டையர் தோன்றும்
மீண்டும் ஹிட்லர்!
லயன் காமிக்ஸ்
ரூ. 2/-